OS 66/2015

பி.வா.சா.2 அண்ணாமலை த/பெ வெள்ளை கவுண்டர்

நாள் 25.02.2026

**குறுக்கு விசாரணை**

1. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் முன்பு ரியல் எஸ்டேட் வேலை பார்த்தேன் தற்போது வேலை எதுவும் பார்க்கவில்லை. இராட்டிணமங்கலம் கிராமத்திற்கு நான் முன்னாள் ஊராட்சி தலைவராக இருந்தேன் என்றால் சரிதான். 1996ம் ஆண்டு தலைவராக இருந்தேன். நான் 6ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எழுத படிக்க தெரியும். பொதுவாக நான் கையொப்பம் செய்வதற்கு முன்பாக அந்த ஆவணத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மையாக இருந்தால் தான் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமானப்பத்திரத்தில் 1ம் பிரதிவாதி வாதி சிவகாமியிடம் ரூ.60ஆயிரம் கடன் வாங்கிக்கொண்டு ஆவணம் எழுதி கொடுத்ததாக விவரம் உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை படித்து பார்த்துவிட்டு ஆமாம் என்று சொல்கிறார். அதே ஆவணத்தில் மாதம் ஒன்றுக்கு ரூ.100க்கு வட்டி ரூபாய் 2 வீதம் வருடா வருடம் செலுத்துவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 2வது பக்கத்திலும் கடைசி பக்கத்திலும் முதலாவதாக நான் சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரிதான்.

2. என்னுடன் வேறு யார் சாட்சி போட்டது என்றால் பத்திர எழுத்தர் முனியாண்டி என்பவர் சாட்சி போட்டார். 2வது சாட்சியாக 1ம் பிரதிவாதியின் மகன் 4ம் பிரதிவாதியான வேலு சாட்சி கையொப்பம் செய்திருக்கிறார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கண்ணன் எனக்கு உறவினரா என்றால் இல்லை எங்கள் ஊரில் பெண் கொடுத்திருக்கிறார். எனது பிரமாண வாக்குமூலத்தில் 4வது பத்தியில் வாதியும் 1ம் பிரதிவாதி கண்ணனும் ஒரு ஒப்பந்த முச்சலிக்கா எழுதி கொண்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வட்டியை தள்ளுபடி செய்து விட்டு அசல் மட்டும் வாங்கிக்கொண்டதாக அந்த ஒப்பந்தம் எழுதப்பட்டதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் வட்டி வேண்டாம் என்று அசல் மட்டும் கொடுத்தால் போதும் என்று எழுதப்படவில்லை என்றால் ஆமாம் எழுதப்படவில்லை. ஒப்பந்த முச்சலிக்கா குறித்து வா.சா.ஆ1 அடமான பத்திரத்தில் விவரம் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஒப்பந்த முச்சலிக்கா பதிவு செய்யப்படாத ஆவணம் என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சலிக்காவை யார் எழுதினார்கள் என்றால் ஒப்பந்த முச்சலிக்காவை முனியாண்டி எழுதவில்லை பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் முனியாண்டியின் கையொப்பமும் இல்லை. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சலிக்காவை யார் எழுதினார்கள் என்றால் எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சலிக்கா வா.சா.ஆ.1 எழுதிய அதே தேதியில் எழுதப்பட்டதா என்றால் அதன் பிறகு எழுதப்பட்டு இருக்கலாம் அது பற்றி எனக்கு தெரியாது. ஒப்பந்த முச்சலிக்காவில் சாட்சி கையொப்பம் செய்த பஞ்சாட்சரம் வா.சாஆ.1 அடமானப்பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றால் சரிதான். இதை தவிர இறந்து போன 1ம் பிரதிவாதி கண்ணனுக்கும் வாதிக்கும் இடையே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம் தெரியாது.

4. உண்மையில் வட்டி வேண்டாம் என்று வாதி சொல்லியிருந்தால் வா.சா.ஆ.1 அடமானப்பத்திரத்தில் அதை குறிப்பிட்டு எழுதி வாங்கியிருப்பார்கள் என்றாலும் நான் 4ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். வேலு அழைத்ததன் பேரில் சாட்சி அளிக்க வந்திருக்கிறேன் என்றால் சாட்சி கையொப்பம் போட்டிருப்பதால் அழைத்தார் அதன் பேரில் வந்திருக்கிறேன். பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சலிக்கா வாதிக்கு தெரியாமல் நாங்கள் ஒன்று சேர்ந்து தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஒப்பந்த முச்சலிக்கா உண்மையான ஆவணமாக இருந்தால் அதனை பதிவு செய்திருப்போம் என்றாலும் 4ம் பிரதிவாதியும் நாங்களும் சேர்ந்து தயார் செய்த ஆவணம் என்றால் சரியல்ல. ஒரே தேதியில் அந்த ஆவணம் எழுதி இருந்தால் அது குறித்து அடமானபத்திரத்தில் விவரம் சொல்லப்பட்டு இருக்கும் என்றால் சரியல்ல.